# இடம்பெயர்க்கப்பட்ட சம்பூர் பிரதேச மக்களின் மீள்குடியேற்றம்: தடைகளும் சவால்களும்

கிருபைராஜா ஆர்[1], அமிர்தலிங்கம் கே[2]

“சம்பூரணம்” என்பதே சம்பூரின் ஆதிப் பெயர். அனைத்திலும் பூரணத்துவம்மிக்க பிரதே என்பதனாலேயே இவ்வாறு வழங்கிவந்தது. பின்னர் இப்பெயர் காலத்தால் மருவி “சம் என்று பெயர் பெறலாயிற்று. இது 1500 ஆண்டுகளுக்கு முந்திய மிகப்பழமைவாய் பழங்குடிகளின் பாரம்பரிய வாழிடம் என்பதும் குறிப்பிடக்கூடிய ஒன்று. இத்தகைய வரலா தொன்மை மிக்க இக்கிராமம் 2006, ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி யுத்த களமாக மாறி இதன் காரணமாக சம்பூர் மக்கள் வரலாற்றிலேயே முதன்முறையாக தமது வாழ்விடங்கை கைவிட்டு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இன்று அப்பிரதேசம் மக்கள் வாழ்க்கை தடைசெய்யப்பட்டு அனல் மின் நிலையம் உள்ளிட்ட பொருளாதார வலய திட்டத்திற் பிரதேசமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பூர் பிரதேசத்தினதும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்களினதும் இன்றைய நிலையை வெளிப்படுத்துவது அம்மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் மக்கள் விருப்புடன் கூடியதும் அரசின் அபிவிரு திட்டத்திற்கு பங்கம் ஏற்படாத வகையிலுமான பொருத்தமான இடத்தை அடையாளப் வதுமே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. சம்பூர் பிரதேசத்து உள்ளடங்கும் சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு, கூனித்தீவு, சூடைக்குடா ஆகிய கிராம சேவகர் பரிவுகளிலும் வாழ்ந்த 1380 குடும்பங்களைச் சேர்ந்த 5000 க்கும் அதி மக்கள் இருக்க இடமின்றி வாழ வழியின்றி அடிப்படை வசதியற்ற முகாம்களில் இன்று முடக்கப்பட்டுள்ளனர். கிளிவெட்டி, கட்டைபறிச்சான், பட்டித்திடல், மணற்சேனை உறவினர் வீடுகளிலிலுமாக நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். இம்மக்களுடன் கலந்துரைய களை நிகழ்த்தியும், வினாக்கொத்துக்கள் வழங்கியும், கிராம நிலதாரி, பிரதேச செய அறிக்கைகள் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் பிரதேசத்தின் அடையாளம் அழிந்து பாதுகாக்கபட்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. குறிப்பாக 80 சத வீ மக்கள் சொந்தக் கிராமங்களையே விரும்புகின்றனர். அரசின் திட்டத்திற்கு 600 ஹெக் நிலம் அபகரிக்ப்பட்டுள்ளது. இதனால் 1000 க்கும் அதிகமான ஹெக்டேயர் நிலம் ப காரணங்களால் பயன்பாட்டுக்கு உட்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. பிரதேசத்தை மக்களுக்குக் கையளித்து பொருளாதார அபிவிருத்தி நோக்கிய திட்ட வேறு இடம்நோக்கி நகர்த்துவது இன்றுவரை சாத்தியமாகக்கூடிய விடயம். அது கை பட்சத்தில் மாற்று இடத்தை தெரிவு செய்து மக்களை மீள்குடியேற்றம் செய்ய இவற்றில் கவனம் செலுத்தப்படுமானால் பல்லாயிரம் மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். அதன் மூலம் அகதி வாழ்வின் அவலத்திற்கும் அதனை பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

**திறவுச் சொற்கள்:** யுத்தம், சம்பூர், முகாம், மீள்குடியேற்றம், வாழிடங்கள்.

*1. Department of Geography, Eastern University, Sri Lanka. E-mail: geokirupa@mail.com*
*2. Department of Economic, University, of Colombo. E-mail: kopalamir@yahoo.com*